# புத்தூரில் மற்றொரு வங்கிக் கொள்ளை!

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
The EELANADU

மலர் 19 ஆவணி 24 ரமழான் 24 இதழ் 209
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9-9-77

## யாழ். நகரில் மீண்டும் பொலிஸ், இராணுவம் பலத்த சோதனை

யாழ்ப்பாணம், வெள்ளி

புத்தூரில் நவக்கிரி (நிலாவரை) என்னுமிடத்திலுள்ள இலங்கை வங்கிக்கிளையில் நேற்று முற்பகல் துப்பாக்கி முனையில் முப்பதினாயிரம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது,

மோட்டார்கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்திய மூவர் அந்தக்காரின் சாரதியைக் காரினுள் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திக் கட்டிப்போட்டதாகவும், பின்னர் வங்கி அலுவலகத்தினுள் நுழைந்து வங்கிக் காசாளரையும், இரும்புப் பெட்டியின் மற்றொரு சாவியை வைத்திருந்த ஊழியரையும் மிரட்டிப் பணத்தைக்கொள்ளையடித்துக்கொண்டு காரில் சென்றதாகவும், பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளைக்கு உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படும் சோமசெற்மோட்டார்க்காரை கொக்குவில் பகுதியிலிருந்து கோப்பாய்ப் பொலிசார் மீட்டுள்ளனர், இக்கொள்ளை சம்பந்தமாகக் கோப்பாய்ப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ஐயாத்துரை தலைமையிலான கோஷ்டி விசாரணை செய்துவருகிறது.

### வீதிகளில் பலத்தசோதனை

நேற்றுமுற்பகல் புத்தூரில் நடந்த வங்கிக்கொள்ளை, கொக்குவில் ரயில் நிலையக் கொள்ளை, நேற்று முன்தினமிரவு யாழ்.நகரில் இரண்டு இடங்களில நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் போன்ற செயல்களைத் தொடர்ந்து நேற்றுமாலை யாழ்ப்பாணப்பகுதியில் பல இடங்களிலும் பொலிசும் இராணுவமும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன

வாகனங்களும் மற்றும் பாதசாரிகளும் சோதனைக்குள்ளாகினர்.

### லொறியிலிருந்து ரூ.26000கொள்ளை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றுக்குச்சொந்தமான லொறியிலிருந்து இருபத்தி ஆறுயிரம்ரூபாய் நேற்றுப்பகல் கொள்ளையடிக்கப்பட்டது.

வல்லைவெளியில்லொறியைத் தடுத்துநிறுத்திய ஆயுதந்தாங்கிய கோஷ்டியொன்றே இக்கொள்ளையில் ஈடுபட்டதாம்.

6-ம் பக்கம் பார்க்க)

மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டபின்

# பிரதேச வாரியாக பிரச்னைகள் தீர்க்கப்படும்

## மட்டக்களப்பில் பிரதமர் ஜே. ஆர். உறுதி

மட்டக்களப்பு, வியாழன்

மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதன்பின்னர் பிரதேச அடிப்படையில் பிரச்னைகள் யாவும் தீர்க்கப்படும் என்று பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கூறினர்.

மட்டக்களப்பு கச்சேரியில் நடந்த உயர் அதிகாரிகள், எம். பி. க்கள் முதலியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் பிரதமர் உரைநிகழ்த்தினர்.

அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைக்கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சரியான நேரத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் நிலைமை சீரடைந்தது என்றும் பிரதமர் சொன்னர்.

மட்டக்களப்பு மாவட்ட எம். பி க்கள் திணைக்களத்தலைவர்கள் உட்பட பல அதிகாரிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களினல் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த சகலரும் தத்தமது இடங்களுக்குத் திரும்பிச்செல்ல சகல உதவிகளையும் அரசு வழங்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதும், பாகுபாடின்றி தீர்த்துவைக்கப்படும் என்னும் கூறிய பிரதமர், பொருளாதார பிரச்னைபற்றி பரிசீலனை செய்வதற்காகத் தாம் மீண்டும் மட்டக்களப்



புக்கு விஜயம்செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

வன்முறைச்சம்பவங்களினல் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டு தெரிந்துகொள்வதற்காகவே தாம் மட்டக்களப்புக்கு விஜயம்செய்துள்ளதாகவும் பிரதமர் கூறினர்

நீதி அமைச்சரும் கல்குடா எம். பியுமான திரு. கே. டபிள்யு. தேவநாயகம் பேசுகையில், அண்மையில் இடம்

(6-ம் பக்கம் பார்க்க)

## ரயில் நிலையத்தில் துப்பாக்கி முனைக் கொள்ளை

### கொக்குவிலில துணிகர சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காலைவேளை ரயில் நிலையத்திற்குள் நுழைந்த மூன்றுவாலிபர் அடங்கிய கோஷ்டி ஒன்று உதவி ரயில் நிலைய அதியரை துப்பாக்கி முனையில் மிரட்டி அங்கிருந்த 360 ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இத்துணிகரச் சம்பவம் நேற்றுக் காலை கொக்குவில் ரயில் நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

உதவி ரயில் நிலைய அதிபர் திரு. சிவப்பிரகாசத்தை இனந்தெரியத பிரஸ்தாப மூன்று வாலிபர்களும் சைக்கிளில்வந்து துப்பாக்கிகாட்டி மிரட்டி பணத்தைக் கொள்ளையடித்ததாக பொலிசில் செய்யப்பட்டுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனைக்கோட்டைப்பொலிஸ் சார்ஜன்ட் திரு.எஸ்.மாணிக்கவாசகர் இதுபற்றிதீவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார். (கு-உ)

பாதிப்புற்ற ஆசிரியர் நிலை:

## இலங்கை ஆசிரியர்-சங்க யாழ்.கிளை மேலும் ஆராயும்

யாழ்ப்பாணம், வெள்ளி

சமீபத்திய வன்முறைகளால் பாதிக்கப்பட்டு யாழ். மாவட்டக்கிற்கு வந்துள்ள ஆசிரியர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து மேலும் ஆராயும் பொருட்டு இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக்கிளை விசேட பொதுக் கூட்டம் ஒன்றினை நடத்தவுள்ளது.

இவ்விசேட கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கிளைத்தலைவர் திரு எஸ். கே. சுந்தரலிங்கம் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். தாய்ச்சங்கப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர். (உ)

## இரத்தினக்கல் கூட்டுத்தாபன இயக்குநர் சபைக்கு ரவீந்திரநாதன் நியமனம்

கொழும்பு, வியாழன்

யாழ். வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திரு. எஸ். ரவீந்திரநாதன் இரத்தினக்கல் கூட்டுத்தாபன இயக்குநர் சபை உறுப்பினராக நிதிமந்திரி திரு. ரொனி டி மெல்வினல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். வைத்தீஸ்வரா, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் ஒரு சார்ட்டட் கணக்களராவார். காலஞ்சென்ற வைத்தியகலாநிதி கே. சி. சண்முகரத்தினம் அவர்களின் மருமகனுமாவார்.

## ஒருநாள் சம்பளம் தியாகம் செய்வர்

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை வன்செயலால் பாதிக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வுக்கு வழங்க முன்வந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டோரின்

# பிள்ளைகளுக்கு சொந்த ஊர் பாடசாலைகளில் அனுமதி

## மருத்துவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

சமீபத்திய கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தத்தம் சொந்த ஊர்களில் உள்ள பாடசாலைகளிலேயே தங்கள் பிள்ளைகளை சேர்த்துக்கொள்ள வசதிசெய்து தருமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ள பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் உதவி வைத்திய அதிகாரிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. யாழ் நிம்மர் மண்டபத்தில் அதிகாரிகள் சங்கத்தலைவர் டாக்டர் ரி.கோபாலசிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

பாதிக்கப்பட்டவர்கள் பொருட்களை பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து தங்கள் இருப்பிடங்களுக்குக் கொண்டுவர இலவச போக்குவரத்து வசதிசெய்து தரவேண்டும் என்பது உட்பட மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

டாக்டர் கோபாலசிங்கத்தைத் தலைவராகக்கொண்ட 16 அங்கத்தவர்கள் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (கூ)

### கிரிமலையில் உறியடித்திருவிழா

மாவிட்டபுரம், வியா.

கிரிமலை போயிட்டி கிருஷ்ணர் ஆலயத்தில் முதல் தடவையாக உறியடி உற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பாரம்பரியமான மேற்படி ஆலயத்தில் முதல் முறையாக ஒழுங்கு செய்யப்பட்ட உறியடி உற்சவத்தைப் பார்க்க ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். (அ)

# எம்.பிக்களுக்கு கார் வசதி

கொழும்பு, வியாழன்

எம். பிக்களுக்கு கார்களை வழங்குவதில் முதலிடம் அளிக்குமாறு அரசாங்க ஊழிய அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தூதுவராலயங்களினால் வழங்கப்படும் கார்களை விற்பனை செய்வதில் எம். பிக்களுக்கு முதலிடம் அளிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கார் வசதியில்லாத எம். பிக்கள் பலர் சபை முதல்வர் திரு. ஆர். பிரேமதாசாவைச் சந்தித்து தமது கஷ்ட நிலை பற்றி எடுத்துக் கூறியதை அடுத்தே திரு. பிரேமதாசா மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

அடுத்த மாதமளவில் கார் வசதியில்லாத எம். பிக்களுக்கு கார்கள் வழங்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# சைக்கிள் உதிரிப்பாகங்கள் மீட்பு: இருவர் கைது!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் உள்ள சைவாலயம் ஒன்றின் அருகில் உள்ள கேணிக்குள் இருந்து திருட்டுச் சைக்கிள்களின் பாகங்கள் எனக் கருதப்படும் நான்கு பார்களை யாழ். பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சார்ஜன்ட் எம். ரெட்ரிக்கோ இவற்றைக் கைப்பற்றினார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஏ. பாலசுப்பிரமணியம், கே. மனோகரன் என்னும் இருவாலிபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ் நகரில் நடைபெற்ற வேறுசில வழிப்பறிச் சம்பவங்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் சார்ஜன்ட் ரெட்ரிக்கோவின் உதவியுடன் இன்ஸ்பெக்டர் திரு. ரி. தாமோதரம்பிள்ளை தீவிர விசாரணை நடத்தி வருகிறார்.

குறிப்பிட்ட சைக்கிள் பார்களின் இலக்கங்களை பொலிஸ் நிலையத்தில் வந்து பார்வையிடலாம் என பொலிசார் தெரிவித்தனர். (உ)

## இடிஅமினுக்கு சத்திர சிகிச்சை

கம்பாலா, செப். 8

உகண்டா அதிபர் ஜெனரல் இடிஅமினுக்கு நேற்று கம்பாலா ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை ஒன்று செய்யப்பட்டது.

சோவியத் யூனியனைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் இச்சத்திரசிகிச்சையை மேற்கொண்டார். (இ)

ஆசிரியருக்குக்கடிதம்:

# இப்படியும் சிங்களவர் இருக்கிறார்கள்

அநுராதபுரத்தில் இப்படியும் சில சிங்களவர் இருக்கத்தான் செய்தான் இறைவன்.

அன்று 17-ம் திகதி காலை 8 மணிக்கு வழமைபோல் என் கணவர் காரியாலயத்திற்குப் புறப்பட்டார். ஜீப்பில் 9-30 மணிக்கு இரு சிங்களச் சகோதரர் அவரை வீட்டுக்குத் திருப்பிக் கொண்டுவந்துவிட்டார்கள். "ஐயா எங்கேயும் போகாதீர்கள். சாப்பாடெல்லாம் நாம் பார்த்துக்கொள்ளுவோம்" என்று சொல்லிச் சென்றனர். 10-30 மணிக்கு இன்னும் இல ஊழியர் எம் வீட்டிற்கு ஓடோடி வந்து "அம்மா, ஐயா எங்கே? எங்கேயும் விட்டுவிடாதேயுங்கள். நீங்களும் பிள்ளைகளும் வீட்டுக்குள்ளே இருங்கள்" என்று மன்றாட்டமாய்க் கேட்டார்கள். 12-30 மணியளவில் எங்கள் சாரதி ஓடோடி வந்தார். "ஐயா, நான் எல்லாம் வாங்கிவந்து விட்டேன். வீட்டுக்குள்ளே கவனமாய் இருங்கள்" என்று அன்புக்கட்டளை இட்டுச் சென்றார்.

பின்பு 4 மணியளவில் எனது கணவரின் அலுவலகத்தில் வேலைசெய்யும் உத்தியோகத்தர் சிலர் ஓடோடி வந்தனர். "ஐயா, அம்மா, காடையர் வரப்போகிறார்கள். விரைவாகப் புறப்படுங்கள்" என்று அவதிப்பட்டார்கள். எங்களுடன் வீட்டைப் பூட்டினார்கள், எங்கள் குழந்தைகளைத் தூக்கினார்கள். ஜீப்பின் பின் ஆசனத்தில் எங்களை அமர்த்தினர். முன்னுக்கு சாரதியும் இன்னும் இரு சிங்களச் சகோதரரும் இருந்தனர். எங்கள் ஜீப்பின் முன்னால் ஒரு சிங்களச் சகோதரர் மோட்டார் சைக்கிளில் பறந்தார். அவரைத் தொடர்ந்து நாங்கள் எங்களுக்குப் பின்னால் இன்னுமொரு ஜீப்பில் நான்கு சிங்களச் சகோதரர். வழியில் காடையர் கற்களுடன் எங்களை வழிமறித்தனர். நின்றார்களா எமது சகோதரர்? மயிர்க்கூச்செறியும் வேகத்தில் பறந்து தம் வீட்டுக்குக் கொண்டுசேர்த்தனர்.

அங்கு எங்களை அவர்கள் அகதிகளாக வைத்திருக்கவில்லை. விருந்தினராகவே வைத்திருந்தனர். எங்கள் முகத்தைகளையும் எங்களையும் சந்தோஷமாக பயம் அறியாத படி வைத்திருந்தனர். அன்று இரவு முழுவதும் சிங்களச் சகோதரரே எங்கள் வீட்டையும் உடைமைகளையும் காவல் புரிந்தனர்.

18-ம் திகதி காலை நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. தமிழரை இனிவிட்டு வைப்பதில்லை என்று முடிவுகட்டிவிட்டார்கள் காடையர். சும்மா இருந்தார்களா எம் சிங்களச் சகோதரர்? எடுத்தார்கள் அரசாங்க அதிபரின் காரை, அதன் முன் ஆசனத்தில் ஒரு பொலிசை துப்பாக்கியுடன் இருத்தினர், பின் ஆசனத்தில் நாங்கள். எங்கள் காருக்கு முன்னால் ஒரு சிங்களச்சகோதரர் மோட்டார் சைக்கிளில் கச்சேரி நோக்கிப் பறந்தார். கார் பின்தொடர்ந்தது. வழியில் எத்தனையோ காடையர் நின்றபோதிலும் க்ஷேமமாய்ச் சேர்ந்தோம். எங்கள் சிங்களச் சகோதரர் எங்கள் செலவுக்கு 100 ரூபா தந்தார். அதையும் நாம் நன்றிப் பெருக்குடன் பெற்றுக்கொண்டோம்.

சிங்களச்சகோதரர் வீட்டைவிட்டு நாம் வெளியேறும் போது நான் அவர்களை நன்றிப்பெருக்குடன் கண்ணீர் விடியக் கும்பிட்டு "உங்களுக்கெல்லாம் பெரிய சிரமம் ஏற்படுத்திவிட்டோம்" என்றேன். அவர் உடனே இல்லை இல்லை இது எம் கடமை என்றார்.

எனது கணவன் பெரியஉத்தியோகம் வகிப்பவர் என்பதற்காக அல்ல, ஓர் உத்தமன் என்பதற்காக அல்ல, ஒரு தமிழ்க் குடும்பம் அடித்து நொறுக்கப்படுவதையும் அவர்கள் உடைமைகள் சாம்பலாவதையும் அந்தச் சிங்களச் சகோதரர் தம் கண்ணால் காண விரும்பவில்லை. அதற்காகத் தமது உயிரைப் பணயம் வைத்து எங்களையும் எங்கள் உடைமைகளையும் காப்பாற்றினர்.

17-ம் திகதி அன்று இச்சகோதரர் எம்மேல் அன்புடன் சகோதர பாசத்துடன் நடந்திருக்காவிட்டால், ஐயோ! ஆண்டவா நினைக்கவே உடல் சிலிர்க்கிறது! வாழ்க சிங்களவர் — தமிழர் சகோதர பாசம்!!

சாந்தா ஜெகநாதன்.
இணுவில், சுன்னாகம்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் திருத்தொண்டர் புராண பூர்த்தி விழா இன்று நடைபெறும்.

நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகளின் அருளுரையுடன் இவ்விழா ஆரம்பமாகும். (சா-உ)

மாவிட்டபுரம், வியா.

தெல்லிப்பழை காசியிற் பிள்ளையார் ஆலய வருடாந்த சங்காபிஷேகவிழா இன்று நடைபெறுகிறது.

திரு. க. ஜெனநாயகத்தின் புல்லாங்குழல் கச்சேரியும் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளும் தண்டிகைபவனியும் இடம்பெறும். (அ)

## அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி அபிவிருத்திச் சபை உறுப்பினராக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் சதா நடராசா; உபதலைவர்கே.எஸ். ஆறுமுகம் செயலாளர் எஸ்.கணபதிப்பிள்ளை, உபசெயலாளர் கே. கனகசபாபதி, தனதிகாரி எஸ். அருளம்பலம் செயற்குழு உறுப்பினர் 5பேர் தெரிவாகினர். (சா-உ)

## மிளகாய் கொள்வனவு

யாழ்ப்பாணம், வெள்ளி

விவசாயிகளிடமிருந்து யாழ் விற்பனவுத் திணைக்களம் செத்தல் மிளகாயை இறாத்தல் ஒன்று 8 ரூபா 50 சதவீதமாக நேற்றுமுதல் கொள்வனவு செய்துவருகிறது.

இதுவரை இங்கு9ரூபாவீதம் கொள்வனவு செய்யப்பட்டுவந்தது.

கொழும்பில் மிளகாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் கொள்வனவு விலை குறைக்கப்பட்டுள்ளதாக யாழ். விற்பனவுத் திணைக்கள ஆணையாளர் திரு. எஸ். கந்தசாமி தெரிவித்துள்ளார். (உ)

இரட்டைக்கொலை:

# ஒருவர் விடுதலை

## நால்வருக்குப் பிணை

மாவிட்டபுரம், வியா.

அளவெட்டி-சண்டிலிப்பாய் இரட்டைக்கொலை வழக்கில் 4 எதிரிகள் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

உடுவிலைச் சேர்ந்த இராமலிங்கம் சண்முகம், மாணிக்கம் மகேந்திரன் ஆகியோரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக அளவெட்டி-சண்டிலிப்பாயைச் சேர்ந்த பி. கந்தையா, வி. அமலநாயகம், எஸ். செல்லத்தம்பி, கே. துரைராசா, வி. சின்னையா, ஏ. இராசதுரை ஆகியோர் மீது சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் எதிரிகளைப் பிணையில் அனுமதிக்கும்படி விடுத்தவேண்டுகோளை அடுத்து 1-ம், 2-ம், 4-ம், 5-ம் எதிரிகளை தலா 1000 ரூபா பிணையில் அனுமதித்து 3-ம் எதிரியை தொடர்ந்து றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

சாட்சிகள் இல்லாத காரணத்தால் 6-ம் எதிரியை விடுதலை செய்தார்.

மேல்விசாரணை இம்மாதம் 27-ந் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. (அ)

## இலங்கை ஆசிரியர் சங்கம்
(ப. இ. 984)

யாழ். மாவட்டக்கிளை (வ.மா.ஆ.ச)

### விசேட பொதுக்கூட்டம்

11.9.77 ஞாயிறு காலை 10 மணி

யா/ வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபம்.

கடந்த கலவரங்களின் போது பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ள இ. ஆ. சங்க உறுப்பினர்களினதும் மற்றைய ஆசிரியர்களினதும் "பிரச்னைகளுக்கும் தீர்வுகளும்" என்னும்விடயம்ஆராயப்படும். தாய்ச் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். பாதிக்கப்பட்டோரும் மற்றையோரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

த. தேவராசா
பொதுச்செயலாளர்.

மல்லாகம் மகாவித்தியாலயம்,
மல்லாகம்.
1977-09-05

7030

# மூன்று தி மு. கழகங்களும் ஒன்றிணைய வேண்டும்

## கருணாநிதிக்கு இடமில்லை என்றும் கூறுகிறார் நெடுஞ்செழியன்

சென்னை, செப் 8

"திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம், இரா. செழியனின் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய மூன்று கட்சிகளும் ஒன்றாக இணைய வேண்டும்."

மக்கள் திராவிட முன்னேற்றக்கழக செயற்குழு நேற்றுக் கூடியபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மக்கள் திராவிட முன்னேற்றக்கழகச் செயலாளர் திரு. இரா நெடுஞ்செழியன் பத்திரிகை நிருபர்களிடம் இது பற்றித் தெரிவிக்கையில், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தவிர்ந்த சகல தி. மு. கவினர் உட்பட மூன்று தி. மு. கவினரும் ஒன்றாக இணையவேண்டும் என்று கூறினார்.

மூன்று தி. மு கழகத்தினரும் ஒரே கோட்பாடுடையவராக இருப்பதனால் இந்த இணைப்புக்கு பல வழிகளில் சாத்தியம் உண்டு என்றும் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார். (இ)

...

### பாலஸ்தாபனம

மாவிட்டபுரம், வெள்ளி

தையிட்டி கணையவிர்பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன விழா இன்று நடைபெறுகிறது.

தொடர்ந்து ஆலய உற்சவங்கள் பூசைகள்யாவும் நடைபெறும் (அ)

# இந்திய ஜனாதிபதிக்கு சத்திர சிகிச்சை

## 5 மணித்தியாலம் நடைபெற்றது

நியூயோர்க், செப். 8

இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவ ரெட்டிக்கு நேற்று நுரையீரலில் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை ஒன்று செய்யப்பட்டது.

நியூயோர்க் ஆஸ்பத்திரி ஒன்றிலிருந்து செய்யப்பட்ட சத்திரசிகிச்சை 5 மணித்தியாலங்கள்வரை நடைபெற்றது என்றும் திரு. ரெட்டி ஆரோக்கியமாக இருக்கிறார் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

திரு. ரெட்டியின் இடது நுரையீரலிலிருந்து கட்டி ஒன்று இச்சிகிச்சையின்போது அகற்றப்பட்டது.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிவுற்றதும் இம்மகிழ்ச்சிச் செய்தி தொலைபேசிமூலம் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு அறிவிக்கப்பட்டது.

திரு. ரெட்டி இன்னும் 10 நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கவேண்டும் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். (இ)

## பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கம்:

# திணைக்கள வாரியாக செயற்குழு உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

சமீபத்திய கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ்ஊழியர் நிலைகுறித்து அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கத்திற்கு திணைக்கள வாரியாக 22 செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

திணைக்கள வாரியாக செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதால், சகல திணைக்களங்களிலுமுள்ள கிளைச்சங்கங்களால் உருவாக்கப்பட்ட உபகுழுக்களுடன் இவர்கள் இணைந்துசெயலாற்றுவார்கள் எனத்தெரிகின்றது.

இச்சங்கத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கும் அத்தனை கிளைச்சங்கங்களும் ஆதரவை நல்கியுள்ளன.

சங்கம், செயற்குழுவின் ஒவ்வொரு திணைக்களங்கள் தீர்மானிக்கும் தீர்மானங்களை ஒன்றுதிரட்டியே சம்பந்தப்பட்ட அமைச்சுடனே அல்லது அமைச்சின் செயலாளருடனே தொடர்புகொள்ளும். இதுவரை இச்சங்கம், எந்தப்பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவில்லை.

செயற்குழுவின் உறுப்பினர்களாக, பின்வருவோர் தெரிவாகியுள்ளனர். புகையிரதப் பகுதிக்கு திரு. கே. எஸ். ஆறுமுகமும், தபால், தந்திப்பகுதிக்கு திரு. கே. எஸ். குணசிலனும், வைத்தியப்பகுதிக்குடாக்டர் கணேஸ்வரன், ரி சிங்கராஜா, பாலரட்ணம், சிவம் பரமநாதனும். பொறியியலாளர் பகுதிக்கு திரு ஏ என். யோகநாதனும், எழுதுவினைஞர் பகுதிக்கு திரு. ஏ. புவனேசனும், இ. போ சபைக்கு திரு. கே நித்தியானந்தனும், தொழில்நுட்பப்பிரிவுக்கு திரு. முத்துலிங்கமும், ஆசிரியப்பகுதிக்கு திரு சிவசுப்பிரமணியமும், விவசாயப்பகுதிக்கு திரு. சி ஜெயரட்ணம், மின்சாரப் பகுதிக்கு திரு வி கந்தசாமியும், கூட்டுத்தாபனங்களுக்கு திரு. எஸ் எம். குமாரசாமியும், சுங்கப்பகுதிக்கு திரு. விக்னேஸ்வரராஜாவும், இறைவரிப்பகுதிக்கு திரு. ரி. சண்முகராஜாவும், அரசுசார்புசபைகளுக்கு திரு எஸ் சிவரத்தினமும, படவரைஞர் பகுதிக்கு திரு. சி நவரத்தினமும், கணக்குப் பரிசோதனைப் பகுதிக்கு வி. ஐ. சிவஞானரட்னமும், அரச அச்சகப்பகுதிக்கு திரு. ஏ. யோகேந்திராவும், மத்திய வங்கிக்கு திரு. மா. கனகேந்திரனும், நிலஅளவையாளர் பகுதிக்கு திரு. கே. எஸ். சந்திரசேகரமும் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் மூலமாக ஒவ்வொரு திணைக்கள நிலைமை குறித்து சங்கம் நடவடிக்கை எடுக்குமெனக் கூறப்பட்டுள்ளது. (கெ-உ)

# இந்திரா மீண்டும் ஆட்சிக்கு வரமாட்டார்

## லண்டனில் ராஜ்நாராயண்

லண்டன், செப். 8

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இனிமேல் என்றுமே ஆட்சிக்குத் திரும்பமாட்டார் என்று இந்திய சுகாதார குடும்பநலத் திட்ட அமைச்சர் திரு. ராஜ் நாராயண் லண்டனில் தெரிவித்தார்.

லண்டனில் இந்தியர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. நாராயண் மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி காந்தி, ஆட்சியில் இருந்தபோது செய்த முறையற்ற செயல்களை வன்மையாகக் கண்டித்த திரு. நாராயண், திருமதி காந்தி தமது புதல்வன் சஞ்சய்காந்தியை வாரிசாக்க பல வழிகளிலும் முயன்றார் என்றும் கூறினார்.

இந்தியாவில் பரம்பரை ஆட்சியும் சர்வாதிகார ஆட்சியும் முடிவுக்கு வந்துவிட்டன என்றும் திரு நாராயண் கூறினார். (இ)

### சுப்பிரமணியம பூங்கா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். சுப்பிரமணியம் பூங்கா திருத்த வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டதாகவும், நேற்று முன்தினம் முதல் பூங்கா இயங்கிவருவதாகவும் யாழ் மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்தார்.

நவீன முறையில் வர்ண நீர் விசிறியை அமைப்பதற்குத் தொடர்ந்து முயற்சி நடந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (கு-அ)

# தீவுப்பகுதியில் புதுரக பயிர்ச்செய்கை முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

தீவுப்பகுதி விவசாயிகளிடத்தில் பரீட்சார்த்தமாக புதுரக பயிர்களை செய்கை பண்ணுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு ஊர்காவற்றுறை விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சிவக்கொழுந்து உதவிவருகின்றார்

கோவா, இலைக்கோவா, கரட், போஞ்சியினங்கள், பூக்கோவா, லீக்ஸ், சலாது, முள்ளங்கி போன்ற இனங்களையும் செடிகொடி வகைகளையும் செய்கை பண்ணுவதற்கு சிறிய அளவிலான முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

இச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் கிராம முன்னேற்றச்சங்க உறுப்பினர்களுக்கும் கிராம விவசாயக் கழகங்களும் போதிய உதவியை விவசாயப்விரிவாக்க பகுதியும் செய்யுமென்று திரு. சிவக்கொழுந்து நமது நிருபரிடம் தெரிவித்தார். [கெ-உ]

# என். சி. ஜீ. ஈ. பரீட்சை ரத்துச் செய்யப்படும்?

கொழும்பு, வியா.

கடந்த அரசினால் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட என். சி ஜீ. ஈ. பரீட்சை ரத்துச் செய்யப்படலாம் எனத் தெரிகிறது.

இப்பரீட்சையை ரத்துச் செய்வது தொடர்பாக, கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் இப்போது ஆராய்ந்து வருகின்றனர். இந்த அதிகாரிகளின் உத்தியோகபூர்வமான அறிக்கை கிடைத்ததும் கல்வி அமைச்சர் இதுபற்றி முடிவு செய்வார்.

9-ம் வகுப்புக்கு நடைபெறும் இப்பரீட்சை முறையை பல கல்விமான்கள் கண்டித்துள்ளனர். இப்பரீட்சையின் பாடத்திட்டம் மாணவர்களுக்கு கஷ்டமாக உள்ளதாகவும் சிலர் தெரிவித்துள்ளனர். இதை அடுத்தே இப்பரீட்சை ரத்துச்செய்யப்பட உள்ளதாகத் தெரிகிறது.

### 5 வயதில் பாடசாலை அனுமதி

அத்துடன் பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்கும் வயது எல்லையையும் ஆறு வயதிலிருந்து 5 ஆகக் குறைக்கவும் இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதுபற்றி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# விவசாயத்தில் இறங்க விருப்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சமீபத்தில் வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட காரைநகர் பகுதியைச் சேர்ந்த பலரும் வவுனியா மாவட்டத்தில் விவசாயம் செய்யும் தம் விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் வர்த்தகர் திரு செ. வேலுப்பிள்ளை தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் துறை என்பனவற்றில் கடமையாற்றியவர்களும் வர்த்தகர்களுமாக சுமார் 1000 பேர் வரையில் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

நொச்சிகாமத்தைச் சேர்ந்த திரு. மு. பொன்னுத்துரை, கொச்சிக்கடையைச் சேர்ந்த திரு. க. கணேஷன் என்ற வர்த்தகர் உட்பட பலரும் தத்தமக்கு விளைந்த விபரீதங்களை உருக்கமாக எடுத்துரைத்தனர்.

வவுனியாவில் விவசாயம் செய்வதற்கு இவர்களில் பலரும் விருப்பம் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் யாழ்., வட்டுக்கோட்டை எம். பி.க்களும் கலந்துகொண்டனர். (உ)

# "முதலாளித்துவ தூண்டுதல்"

யாழ்ப்பாணம், வெள்ளி

தொழிலாளர்கள், விவசாயிகள் உழைக்கும் வர்க்கத்தினர் வகுப்புரீதியாக ஒன்றுசேர்வதைத் தடுப்பதற்கு, முதலாளி வர்க்கத்தினர் முயற்சிசெய்து இனத்துவேஷத்தை தூண்டியதாலேயே இலங்கையில் அசம்பாவித நிலை ஏற்பட்டது. இதற்கு துரதிருஷ்ட வசமாக ஒன்றுமறியாப் பொதுமக்கள் தூண்டிவிடப்பட்டனர். என்றுநாட்டில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக அரசாங்க லிகிதர்சேவைச் சங்க செயற்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றல் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய எந்த இனபேதமுமின்றி முதலாளித்துவ வகுப்புவாதி ஒன்று சேர்ந்து ஏழைகளை சூறையாடுகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. (கெ-உ)

பாதிப்புற்றவர்களுக்கு

# குடியேற்றப்பண்ணை, கைத்தொழில் முயற்சிகள் மூலம் புதுவாழ்வு

## கூட்டுறவாளர் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"அண்மையில் நடைபெற்ற கலவரங்களினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு கூட்டுறவாளர்களாகிய நாம் நிரந்தரமான வாழ்க்கையை அமைக்கக்கூடிய வசதிகளைச் செய்து கொடுத்தல்வேண்டும். குடியேற்றப்பண்ணை, கைத்தொழில் முயற்சிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களது எதிர்கால வாழ்வு நம்பிக்கையுடையதாயிருக்கும்'

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற கலவரங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வு அளிப்பது பற்றி ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. சு. கந்தையா கூறினர்.

இக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில் இடம் பெற்றது.

இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணம், பரந்தன் மாவட்டங்களிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும் இயக்குநர்களும், பொதுமுகாமையாளர்களும் சமுகமளித்திருந்தனர் கூட்ட ஆரம்பத்தில் இறந்தவர்களுக்காக 2 நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது. தலைவர் திரு. அ. கந்தையா தொடர்ந்து தமதுரையில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, முதலிய இடங்களில் வீடுகள் உள்ளோர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளார்கள் எனவும் ஆனல் இவ்விடங்களில் இருப்பிடவசதியில்லாதோர் அகதிகளாகியுள்ளனர் இத்தகையவர்களுக்கு கூட்டுறவாளர்களாகிய நாமே நிரந்தரமான வாழ்க்கையை அமைக்கக்கூடிய வசதிகளை செய்து கொடுத்தல்வேண்டும். குடியேற்றப்பண்ணைகைத்தொழில் முயற்சிகள் போன்றவற்றை ஏற்படுத்திக்கொடுத்தால்இவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உதவியாகவிருக்குமெனக் குறிப்பிட்டார். இதற்கான நிதி பற்றிக் குறிப்பிடுகையில் கூட்டுறவாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் நிதிவழங்கி உதவலாமெனவும் இம்மூன்று சாராரையும்கொண்ட அமைப்பை நிறுவலாமெனக் குறிப்பிட்டு இவைபற்றிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவிக்கும்படி சபையினரைக் கேட்டுக்கொண்டார்.

### நேசையா பேச்சு

பேராசிரியர் நேசையா பேசுகையில்: ''அகதிகளுக்கான தற்கால உதவிகளை அரசாங்கம் செய்து கொடுக்குமெனவும் எமது உதவிகள் நீண்டகால உதவிகளாக இருக்கவேண்டுமெனவும் தமது ஆலோசனைகளைத் தெரிவித்தார். உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. கோபாலரெத்தினம் பேசுகையில் வன்செயல்களைக்கண்டு விரக்தியடையாது பாதிக்கப்பட்டவர்களை முன்னேற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக கருத்தில் கொண்டு முன்னேற்றப் பாதையில் செல்லநடவடிக்கை எடுக்கும்படியும் தமது ஆலோசனைகளையும் குறிப்பிட்டார். பிரசைகள் புனர்வாழ்வு குழுத் தலைவர் அரசரத்தினம்பேசுகையில் பல ஸ்தாபனங்கள் நிதி சேர்த்தாலும் எல்லாம் ஒரு அமைப்பின் கீழ் நடவடிக்கைகளை எடுப்பது நல்லதென்பதற்காகவே பிரசைகள் குழு ஆரம்பிக்கப்பட்டதாகவும் புள்ளிவிபரங்கள்எடுக்கப்பட்ட பின்னரே சரியான திட்டங்கள் வகுக்கமுடியுமெனவும் இதற்கான ஒழுங்குகளை தாம் செய்வதற்கு கூட்டுறவாளர்களை தமக்கு ஒத்துழைப்புத் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

### கூட்டுறவு உதவி ஆணையாளர் உரை

திரு. க. ஜெயகாந்தன் பேசுகையில் தற்போதைய உதவிகள் போதுமானவையெனவும் நீண்டகாலத் திட்டங்களே தேவையாகவுள்ளதெனவும், உடனடித்தேவைகள் மட்டுமல்லாது மனோரீதியில் பக்குவப்படக்கூடிய வழிகளை செய்யவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இன்னும் பலர் தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவித்த பின்னர் பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது ப. நோ. கூ. சங்கம், மீனவர் கூ. சங்கம், தெங்கு பனம் (பாளை) உ. வி. சங்கம் அதன் தொழிற்பரப்பில் உள்ளோரிடம் நிதியைச் சேர்க்கலாம். நிதிசேர்ப்பதற்கு முன்னோடிகளாக பொது முகாமையாளர், தலைவர், அல்லது ஒரு நெறியாளர் உறுப்பினர் முன்நின்று உழைத்தல்வேண்டும் சேர்க்கப்பட்ட நிதி பாதுகாப்பு நிதியாக தேவை ஏற்படும் வரை சங்கங்களிலேயே இருக்க வேண்டும்.

கூட்டுறவாளர்கள், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், கூட்டுறவுப் பணியாளர் பிரதிநிதிகள் அடங்கிய பதினொரு பேரைக்கொண்ட திட்டமிடும் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. பின்வருவோர் திட்டமிடும் குழுவின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள்: சு. கந்தையா தலைவர், ஸ்ரீல. தே. கூ. சபை யாழ்ப்பாணம், யோ ஆசிநாதர் உபதலைவர் ஸ்ரீல தே. கூ. சபை-பரந்தன், திரு யோ. அருணசலம் உதவி அரசாங்க அதிபர். எஸ். அழகரத்தினம் காரியாலயப் பரிசோதகர், தி சிவஞானம், ஞா. நல்லையா, க இ. குமாரசாமி, எம். எம். யூசுப், கூட்டுறவு பணியாளர் பிரதிநிதிகள் மூவரை தெரிவு செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். (கா-உ)

## மாசேதுங் நினைவுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

சீனக்குடியரசின் முன்னாள் ஜனாதிபதி மா-சே-துங்மறைந்த முதலாவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் பகிரங்க சொற்பொழிவு இன்றுமாலைஇலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. நா. சண்முகதாசனால் கொழும்பு யேம்ஸ் பீரிஸ் மாவத்தையிலுள்ள சீலி மண்டபத்தில் நிகழ்த்தப்படவிருக்கிறது. (கெ-அ)

## ராஜினமா

காவிட்டபுரம், வியாழன்

அகில இலங்கை இசை வேளாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார். இச்சங்கத்தின் ஆரம்பகாலம் முதல் செயலாளராகக் கடமையாற்றிய இவர் தன் ராஜினமாக் கடிதத்தை சங்கத்தின தலைவருக்கும், பொருளாளருக்கும் அனுப்பிவைத்துள்ளார். (அ)

## பாராட்டு

சித்தன்கேணி, வியா

கலைநகர் நேருஜி கிராமமுன்னேற்றச்சங்கமும், சனசமூக நிலையமும் நிரந்தரஅதிபரின்றி இயங்கிவந்த வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயத்திற்கு திரு. வே. தப்பையா அதிபராக நியமிக்கப்பட்டமை குறித்துகல்வி அமைச்சு வடமாநில கல்வியதிகாரி ஆகியோருக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது. (அ-உ)


சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்

கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் ரோட்டுத் தெற்கு,
கொழும்பு - 10
போன்: 24261-5

மங்கையர் குலத்திற்கு மாருதபெருமையை ஏற்படுத்த வருகிருள் !

ஸ்ரீதர்
யாழ்நகர்

9-9-77 இன்று குதூகல ஆரம்பம்!
குறிப்பிட்ட நேரத்திற்கு படக்காட்சி காண்பிக்கப்படமாட்டாது
தினசரி காலை 8-00, 11-00, பி. ப. 2-00, 5-00 மணி
இந்தியாவில் 250 நாட்களுக்குமேல் ஓடி புயல்வேக சாதனை படைத்த புதுமைச் சித்திரம்!



கலை இளவரசன்
★ சிவகுமார்
கலையரசி
★ சுஜாதா
★ ஸ்ரீகாந்த்
★ படாபட்ஜயலக்ஷ்மி
★ மணிமாலா
★ சுப்பையா
★ எம்.என். ராஜம்
மற்றும் பலர் நடித்த



★ அன்னக்கிளி ★

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
**கணவன்**

**பூலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 7-00
**கார்த்திகைதீபம்**

**ராணி**
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
சிவ ஜி - கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
**பெண் தெய்வம்**

**ராஜா**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 5-30
போன்: 7180
எஸ் எஸ் ஆர் - சரோஜாதேவி
நடித்த
**தேடிவந்த செல்வம்** [புதிய பிரதி]

**மனோஹரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**Regal** (Jaffna)
Daily at 10-30 a.m., 3-30 & 6-30 p.m.
SEAN CONNERY in
**"Murder on the Orient Express"**
(Color)

**RIO**
(Jaffna)
Grand Release With New Projector's
Daily 10-30, 4-45, 7-15 p.m. only
EDGAR RICE BURROUH'S
**At The Earth's Core**
FAMILY ENTERTAINMENT

**சாந்தி**
யாழ். நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
எம். ஜி. ஆர்., ஜெயலலிதா
நம்பியார், முத்துராமன், சோ
**ஒரு தாய் மக்கள்**
(புத்தம் புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ் நகர்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் - ஜெய்சித்ரா
**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 76..
ஜெய்சங்கர் - சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**வின்ஸர்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)


### CLASSES

Rapid Revision classes for A/L April 1978 Exam. Science Subject only Classes Commencing - 9th Sept. 1977. Director. Science Centre, Karaveddy. 6997

### CLASSES

Rapid Revision Classes for H. N. C. E. & A. L. April 1978 Exam Arts & Commerce Classes commencing - 9th Sept 1977. Director, Modern Education Centre, Karaveddy. 6996

## மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
## முக்கிய அறிவித்தல்

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தின் சாக்குக் களஞ்சியம் சண்டிலிப்பாய் பழைய கிளை 13 கட்டிடத்தில் நடந்த சாக்குக் களவு பற்றிய ஆதாரபூர்வமான முறையில் தகவல் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். பெயர்கள் இரகசியமாக வைக்கப்படும்.

பொதுமுகாமையாளர்

7-9-1977. 7026

## யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
## அதிஷ்ட லாபச் சீட்டு

கட்டட நிதிக்கான அதிஷ்ட லாபச்சீட்டிழுப்புத் திகதி தவிர்க்க முடியாத காரணங்களால்

**25-11-77 காலை 10-00 மணிக்கு**

பின்போடப்பட்டுள்ளது.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்.

8-9-77. 7025

## சீநோர் அபிவிருத்தித்திட்ட மீன்பிடிப்பகுதியில்
## படகு இயக்குனர், மாலுமிகளுக்கான வெற்றிடங்கள்

1. பதவிகள்
   (அ) இழுவை மீன்பிடிப் படகு இயக்குனர்
   (ஆ) மாலுமிகள்
2. தகைமைகள்
   படகு இயக்குனர்: படகு இயக்குனருக்கான கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவின், அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஸ்தாபனங்களின் தகைமைப்பத்திரமும், 10-லிருந்து 15 வருட அனுபவமும்.
   மாலுமிகள்:- 10-லிருந்து 15 வருட மீன்பிடி அனுபவம்.
3. வேதனம்
   பிரயாண அடிப்படையில் ஒவ்வொரு பிரயாணத்துக்கும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.
   (அ) இயக்குனர்: 1. 42 அடி—48 அடி படகு 15 ரூபா (ஒவ்வொரு பிரயாண நாளுக்கு)
   ,, 2. 25 அடி—28 அடி படகு 12 ரூபா (ஒவ்வொரு பிரயாண நாளுக்கு)
   மாலுமிகள்:- 10-லிருந்து 15 வருட அனுபவம் உள்ளவர்களுக்கு ரூபா 10 (ஒவ்வொரு பிரயாண நாளுக்கு)
   (ஆ) அத்துடன் கடல் விசேடபடியாக கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.
   42 அடி, 48 அடி படகு ரூபா 8. முதல் 36 மணித்தியால நேரத்துக்கு. அதன்பின் ஒவ்வொரு 12 மணித்தியாலயத்துக்கும் ரூபா 3/- வழங்கப்படும்.
   (இ) பகுதி-3-ல், அ, ஆவுடன் பிடிக்கப்படும் மீன் பெறுமதியின் 5% வீதத்தை அப்படகில் வேலை செய்யும் ஊழியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

மேற் கூறிய நிபந்தனைகளை காலத்துக்குக்காலம் மாற்றுவதற்கு நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்பத்திரங்களையும் நற்சாட்சிப்பத்திர பிரதிகளையும், புரட்டாதிமாதம் 20-ம் திகதிக்கு முன் "திட்ட அதிகாரி" சீநோர் அபிவிருத்தித்திட்டம், காரைநகர் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

7028

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வவுனியா - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 121 ம் கட்டைக்கு அருகில் நல்ல நீர்ப்பாசனவசதியுடன் கூடிய கிணறும், தென்னை, மா, பலா முதலிய நல்ல பிரயோசனங்களுடன் கூடிய 5 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்குண்டு நேரில் பார்வையிடவும். சிவாஸ் பண்ணை, 121 ம் கட்டைக்கருகில் விளக்கு வைத்த குளம், ஓமந்தை. 7011

யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசகம் வீதியில் வீடு கட்டச் சிறந்த காணி 2½ பரப்பு விற்பனைக்குண்டு. வே. கந்தசாமி, 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6993

கொடிகாமம்-பளை ரோட்டில் சுமார் ¼ மைல் தூரத்தில் 184-ம் மைல் கல்லுக்குச் சமீபத்தில் கல்வீடு வளவுடன் நிலப்பரப்பு 3¾ வீடு ¼ மொத்தமாக 4 பரப்பும் இன்னுமொரு காணி சுமார் 25 பரப்பும் விற்பனைக்குண்டு. இக்காணிகளிரண்டும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் எங்களால் தொடரப்பட்ட வழக்கின் தீர்வையின்படி ஆட்சியும் உறுதுமான ஆதனங்கள். தொடர்பு கொள்ளும் விலாசம்: அ. ஆரூரன், "கனகஸ்தான்", கோண்டாவில். 7027

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணம்

கிளிநொச்சிச் சந்தை ஸ்தானத்தில் 2-ம் இல. மாட்டிறைச்சிக்கடையில் 1-9-77 தொடக்கம் 31-12-77 வரைக்கும் கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனை செய்யும் உரிமை கோரி அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இவ்வலுவலகத்தில் கேள்விப் பிணைப்பணமாக ரூபா 100/-ம், பத்திரப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தியதன் பெயரால் வழங்கப்படும் பத்திரம் 1977-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14-ந் திகதி பிற்பகல் 2-30 மணி வரை கிளிநொச்சிப் பட்டணத்தின் விசேட ஆணையாளராகிய என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1-9-77லிருந்து 13-9-77 பிற்பகல் 2-30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படும். பத்திரப்பணம் ரூபா 10/- திருப்பித் தரப்படமாட்டாது. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
15-8-1977. 7029

# திரும்பிச் செல்பவர்களுக்கு இலவச பிரயாணச் சீட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

சமீபத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களினால் யாழ்ப்பாணம் வந்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லாதவர்களும் தத்தம்குடும்பங்களுடன் பழைய வசிப்பிடங்களுக்குச் செல்வதற்கு இலவச ரயில் பிரயாணச்சீட்டு வழங்குவதற்கு அரசாங்கம் முன் வந்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேலிடத்தின் பணிப்புரையின் பேரில் சமூகசேவைகள் பகுதி யாழ் உதவி ஆணையாளர் திரு. கே. கெங்காதரம் மேற்கொண்டுள்ளார். இலவச ரயில் பயணச்சீட்டுப் பெறுவதற்கு அவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

இங்கு வந்துள்ள ஆசிரியர்களும், கல்வியமைச்சில் வேலை செய்பவர்களும் யாழ் வித்தியாதிபதியிடம் தமது உத்தியோகபூர்வ ரயில்வே வாரண்டுகள் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது

பொறியியல் சேவையாளர்கள் (டி. சி. ஈ. ஓ.) மாவட்ட வேலைப்பகுதி அதிபரிடமும், கட்டடப்பகுதி உத்தியோகத்தர்கள் யாழ். கட்டடப்பகுதி சுப்றீண்டன்டிடமும், உள்ளூராட்சிப்பகுதி திணைக்கள ஊழியர்கள் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமும், தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் கையெழுத்திடும் பெரும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் அந்தந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களிலும், சுகாதார அமைச்சில் கடமையாற்றும் ஊழியர்கள் யாழ் சுகாதார சேவைகள் அத்தியட்சகரிடமும், ரயில்வே ஊழியர்கள் யாழ்ப்பாணம் தலைமை ரயில் நிலைய அதிபரிடமும், தபால், தந்தி, தொலைபேசி ஊழியர்கள் யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகரிடமும், நில அளவை இலாகா ஊழியர்கள் யாழ். மாவட்ட நில அளவைப்பகுதி அத்தியட்சகரிடமும், விவசாயத்திணைக்கள ஊழியர்கள் யாழ். கூட்டுறவு இலாகா உதவி ஆணையாளரிடமும், இருந்து தத்தம் உத்தியோகபூர்வ ரயில்வே வாரண்டுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாழ். பொலிஸ் அதிபரிடமும் இருந்து ரயில்வே வாரண்டுகளைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய அரசாங்க திணைக்கள கூட்டுத்தாபன ஊழியர்களும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஊழியர்கள் யாழ். கச்சேரி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் தத்தம் ரயில்வே வாரண்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது, மேற்படி அனைவரது குடும்பங்களுக்கும் இலவச வாரண்ட் வழங்கப்படும். மேற்படி ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்பின்பேரில் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கத்தின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசெப் தெரிவித்தார். (உ)

## காணவில்லை

1-9-77 அன்று கோப்பாய் சந்திக்கருகாமையில் பசுமாடு ஒன்று காணவில்லை. அதில் தி. ஆ.மூன்றுசூலம் ஆகிய குறிகள் உண்டு. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். விபரங்களுக்கு: சு. சந்தரராஜசர்மா, முருகமூர்த்தி கோவில், மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி. 7035

## மரண அறிவித்தல்

### திரு. பா. ம. மத்தாய்

கேரளத்தைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் 'கொழும்பு றெஸ்டோறன்ட்'டில் கடமையாற்றியவருமான மத்தியூஸ் என அழைக்கப்படும் மத்தாய் 6-9-77இல் காலமானார். இவர் ஜானகியின் அன்புக்கணவரும், மேரி, தொமஸ், அனு, சாரும்மா, மத்தியூ ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 10-9-77 சனிக்கிழமை மாலை 3-00மணியளவில் 35, மணிக்கூட்டு ஒழுங்கையிலிருந்து கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். 7036

## வித்தியாலங்கார தமிழ் மாணவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை வித்தியாலங்கார வளாக மாணவர்களும், விரிவுரையாளர்களும் தங்கள் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். ஆஸ்பத்திரிவீதி கணக்கியற்கல்லூரியில்யில் கூடவுள்ளனர். (கா-உ)

## மரண அறிவித்தல்

### திருமதி இ. முத்துமணி

இவர், திருநெல்வேலியைச்சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் சுப்பர் இராசையாவின் அன்புமனைவியாவர். அன்னாரின் பூதவுடல் திருநெல்வேலி மயானத்தில் வெள்ளிக்கிழமை (9-9-77) மாலை 3 மணிக்கு தகனம்செய்யப்படும்.

தகவல்: இராசநித்திலபதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

7034

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கத்தின் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களின் கிளைக் கூட்டம் இன்று காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாண மாநகர சபை மண்டபத்திலும். நில அளவையாளர்சங்கத்தின் கூட்டம் காலை 10 30 மணிக்கு வை. எம். சீ. ஏ. மண்டபத்திலும், நெற்சந்தைப்படுத்தும் சபை ஊழியர்களின் கூட்டம் பிற்பகல் 3-30 மணிக்கு 148, நாவலர் வீதி யாழ்ப்பாணத்திலும், தபால் தந்தி ஊழியரது கூட்டம் யாழ். தபாலக இளைப்பாற்று மண்டபத்தில் காலை 11-00 மணிக்கு நடைபெறவுள்ளன. (கெ)

## வண்ணை ஞானவைரவர் கோவில்

## பரிவாரமூர்த்தி ஸ்ரீமுருகப் பெருமான் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணார்பண்ணை நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஞான வைரவர் சுவாமி கோயில் பரிவார மூர்த்தி ஸ்ரீ முருகப் பெருமான் மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 16ம் திகதி (ஆவணி 31) வெள்ளிக்கிழமை காலை 11 45 மணிக்கும் 12. 20 மணிக்குமிடையில் நடைபெறும்.

புதன் கிழமை 14ம் திகதி (ஆவணி 29) விநாயகவழிபாடும், யாகரம்பமும் நடைபெறும். அடுத்தநாள் வியாழக்கிழமை காலையும் மாலையும் பிம்பாஸ்தாபனமும். வெள்ளிக்கிழமை காலை பச்சிமகள் தானம் ஸ்தாபி அபிஷேகமும் விநாயர், வைரவர் அபிஷேகமும், பகல் 12. 10 மணிக்கு ஸ்ரீமுருகன் கும்பாபிஷேகமும் யஜமான் அபிஷேகம் மங்கள ஆசீர்வாதமும் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இடம் பெறும்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் பிரதிஷ்டா பூஷணம் ஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் இக்கிரியைகளை நடத்திவைப்பார்.

## வெடிவிபத்தில் காயமுற்ற ஒருவர் மரணம்

### மற்றவர் பிஸ்கால் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் வெடிவிபத்தினால் படுகாயங்களுக்குள்ளான இருவரில் ஒருவர் நேற்றுமுன்தினமிரவு மரணமானார்.

மணிக்கூட்டு வீதியிலுள்ள செம்பு கடையும் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட திடீர் வெடி விபத்தை அடுத்து அத்தொழிற்சாலையில் தற்செயலாக நின்றிருந்த தம்பிமுத்து பாரதிதாசன், சிவராசா கருணதாஸ் ஆகிய இருவாலிபர்களும் படுகாயமுற்று மயக்க நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பாரதிதாசன் என்ற இளைஞன் நேற்று முன்தினமிரவு மரணமானார்.

இவரது மரணம் பற்றி மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடாத்தினார்.

இம்மரண விசாரணையின் போது காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த திரு. கருணதாஸ் சாட்சியமளிக்கையில், அண்மையில் நடைபெற்ற கலவரத்தினால் எமது தொழிற்சாலையிலுள்ள கருவிகளை காலஞ்சென்றவரின் வீட்டில் கொண்டுபோய் வைத்து வேலைசெய்தோம். இத்தொழிற்சாலை இறந்தவரின் தாயாரான நல்லம்மாவுக்கே சொந்தமானதாகும். இறந்தவரின் தகப்பனாராகிய தம்பிமுத்து இரண்டு வருடகாலத்தின் முன்பே இறந்துவிட்டாராம். இதனால் இறந்தவரேஇத்தொழிலை கவனித்து வந்தார். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பித்தளை இல்லாமையால் அவரது வீட்டில் இருந்து மணிக்கூட்டு வீதியிலுள்ள தொழிற்சாலைக்கு பித்தளை எடுக்கச் சென்றோம். அப்போது தொழிற்சாலையிலுள்ள கதவுகளின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தன. எனவே யாரோ திருடர் புகுந்திருக்கவேண்டும் என நினைத்துக் கதவை உதைத்துத் தள்ளினோம். உடனே ஏற்பட்ட பலத்த வெடிச்சத்தத்தினால் நான் மயக்கமுற்றேன்''

இறந்தவரின் நல்லம்மாவும் சாட்சியமளித்தார். விசாரணை முடிவில் இறந்தவரின் உடலை தாயாரிடம் ஒப்படைக்குமாறும் கூறி மரணவிசாரணை அதிகாரி விசரணையை ஒத்திவைத்தார்.

பொலிசார் இவர்கள் கைக்குண்டு தயாரித்ததினால் ஏற்பட்ட விபத்து என சந்தேகிப்பதனால் கருணதாஸ் தொடர்ந்தும் பிஸ்கால் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (கு)

## பாதிக்கப்பட்டவர் புனர்வாழ்வுத் திட்டம்

### வேலைவாய்ப்பு அறிவித்தல்

யாழ், லயன்ஸ் கழகத்தினர் சேகரித்த விபரங்களின் படி யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாதிக்கப்பட்டவர்கள் முகாம்களிலும் உள்ள கீழ்க்கண்ட தொழில் பிரிவினருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்குமாறு அல்லது அவர்தம் வேலைவாய்ப்புகளுக்கு உதவுமாறு, தனிப்பட்டவர்களிடமும், பொது ஸ்தாபனங்களிடமுமிருந்து தகவல்கள் கோருகின்றனர்.

- சமையல்காரர்கள்
- பரிசாரகர்கள் (உவெய்ட்டர்ஸ்)
- மேசன்கள்
- தச்சுத்தொழிலாளர்கள்
- உவெல்டர்ஸ் (Welders)
- இலெக்ரீஷன்ஸ்கள்
- தையற்காரர்கள்
- சிகையலங்காரப்பாளர்கள்
- சாரதிகள்
- லொறி கிளீனர்கள்
- காவலாளர்கள்
- கமத்தொழிலாளர்கள்

பாதிக்கப்பட்டோர் புனர்வாழ்வுச்சபை

பொதுநூலகம்

யாழ்ப்பாணம்.

## புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி

யாழ்ப்பாணம். வெள்ளி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி நிறுவிநர் நினைவு நாளும் பரிசளிப்பும் இம்மாதம் 10-ந் திகதி சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணிக்கு கொண்டாடப்படும்.

நலன்புரிச் சங்கத்தினரின்

## முதலாவது தொழிற்சாலை

யாழ்ப்பாணம். வெள்ளி

தமிழர் நலன்புரி இயக்கத்தின் முதலாவது தொழிற்சாலை இன்று பகல் 12-00 மணிக்கு மில்க்வைற் தொழிலக அதிபர் திரு. க. கனகராஜாவினால் திறந்துவைக்கப்படும். இத்தொழிற்சாலை நான்குபேருக்கு வேலைவாய்ப்பளிக்கும், கடதாசிப் பொம்மைகளை உற்பத்தி செய்யப்படவுள்ளது.

## புத்தூரில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக்கோஷ்டி மோட்டார் கார் ஒன்றில் வந்ததாகவும் பின்னர் சிலர் அவர்களைத் தாக்கமுனைந்தபோது அவர்கள் மோட்டார் காரை விட்டு ஓடியதாகவும் அந்தக் காரில் சில துப்பாக்கிகள் இருந்ததாகவும் அவற்றையும் மோட்டார் காரையும் வல்வெட்டித்துறைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## மாவட்ட —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தற்காலிகமானதே. இன்றும் இச்சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் புனர்வாழ்வு அளிக்க அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா பேசுகையில் நாட்டில் வகுப்புவாதத்தை ஒழிக்க ஐக்கிய தேசியக்கட்சிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் வகுப்புவாதத்தை நாட்டிலிருந்து அறவே ஒழிப்பதே ஐ. தே. கட்சியின் நோக்கம் என்றும் கூறினார்.

பட்டிருப்பு எம். பீ. திரு. பீ.கணேசலிங்கமும் பேசினார்.

அமைச்சர் குழு அங்கிருந்து திருகோணமலைக்குச் சென்றது. (இ)